# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 301/2022 |
| Prosecution Witness | : | PW 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்திரசேகர் | Caste | : | |
| Father's Name | : | பிச்சை | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 17.03.2023.**

***எதிரி 1, 2 வருகை***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் பட்டுக்குடி, பாபநாசம் தாலுக்காவில் வசிக்கிறேன். நான் செங்கல் சூளையிலும், சைக்கிளில் டீக்கேன் வைத்தும் தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் பக்கத்து வயல் காரர்கள் ஆஜர் எதிரிகள். அவர்களுக்கும் எங்களுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை. அது சம்பந்தமாக ஊர்க்காரர்களிடம் பஞ்சாயத்து வைத்தோம். பஞ்சாயத்தில் எதிரிகள் கட்டுப்படவில்லை. 14.04.2022 அன்று செங்கல் சூளை கொழுத்தியிருந்தோம். 20ம் தேதியன்று மாலை 5.30 மணியளவில் கல்லை ஏற்றுவதற்காக வழித்தடம் அமைப்பதற்காக அங்கிருந்த ஜல்லிகற்களை ரோட்டில் லாரி ஏறிபோவதற்காக போட்டிருந்தோம். அப்போது ரமேசும் அவர் அம்மா ராஜலெட்சுமியும் வந்து எப்படி எங்கள் இடத்தில் கல்லை போட்டீங்க என்று சொல்லி செங்கல் சூளையில் வேலை செய்து கொண்டிருந்த அர்ச்சுணன் மற்றும் அவரது மனைவி புஷ்பவள்ளி ஆகியோருடன் சண்டைபோட்டு அவர்களை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். இந்த சம்பவம் சுமார் 6.00 மணியளவில் நடந்தது. அர்ச்சுணனும் புஷ்பவள்ளியும் இந்த தகவலை எனக்கும் என் அப்பாவிற்கும் போன் செய்து சொன்னார்கள். என் அப்பா முன்னால் போனார், நான் பின்னால் போனேன். அப்போது ராஜலெட்சுமி உன்னைத்தான்டா எதிர்பார்த்துகொண்டிருந்தேன். தேவடியான மகனே சாவுடா நீ, நீயிருந்தால் எங்களால் விவசாயம் செய்ய முடியாது உன்னை வெட்டிட்டு வந்தால்தான் வீட்டிற்கு வரமுடியும் என்று என் அம்மா

சொல்லியிருக்கிறார் என்று சொல்லி ரமேஷ் அரிவாளால் என் அப்பாவை வலது முழங்கையிலும் வலது பக்க நெற்றிபொட்டிலும் கன்னத்திலும் மாறிமாறி வெட்டிவிட்டார். அதைப்பார்த்துவிட்டு நான் டேய் டேய் என்று ஓடுவதற்குள் எதிரி ரமேஷ் மணியாற்றில் இறங்கி ஓடிவிட்டார். ஒழுங்கா இருடா தேவடியா மகனே உனக்கும் இதே கதிதான் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். நான் போய் பார்த்தபோது என் அப்பா இரத்தம் பீச்சி அடித்து இரத்த வெள்ளத்தில் கிடந்தார். நான் ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னேன். ஆம்புலன்ஸ் வர லேட் ஆகும் என்பதால் தேவன்குடியில் உள்ள என் நண்பர் விஜய்க்கு போன் செய்து காரை எடுத்து வர சொன்னேன். அவரிடம் சைலோகார் TN 11 AP 5181 இருந்தது அதை எடுத்துகொண்டு வந்து அய்யம்பேட்டை Gh க்கு என் அப்பாவை எடுத்துகொண்டு சென்றோம். அங்கு பரிசோதித்த doctor வரவழியிலேயே என் அப்பா இறந்துவிட்டதாக சொன்னார். அதன்பிறகு நான் என் தங்கைகளுக்கும் மாப்பிள்ளைகளுக்கும் போன் செய்து என் அப்பாவை ரமேஷ் வெட்டி அவர் இறந்துவிட்டதாக தகவல் சொல்லிவிட்டு அங்கேயே இருந்தேன். அரைமணிநேரத்தில் அவர்கள் வந்தபின்னர் கபிஸ்தலம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் **அசாஆ 1**. என் அப்பாவைவெட்ட பயன்படுத்திய அரிவாள் என்னிடம் காட்டப்படுகிறது. அது **அசாபொ1**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

மனுவின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 301/2022 |
| Prosecution Witness | : | PW 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : அர்ச்சுணன் | Caste | : | |
| Father's Name | : தாவான் | Calling | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 17.03.2023.**

***<u>எதிரி 1, 2 வருகை</u>***

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u> :–**

நான் ஒரத்தநாடு தாலுக்கா தெக்கூரில் குடியிருக்கிறேன். பட்டுக்குடியில் செங்கல் சூளையில் கல்லறுக்கும் வேலை பார்க்கிறேன். கடந்த வருடம் பிச்சையிடம் பார்த்தேன். இந்த வருடம் தேவநல்லம்மாள் என்பவரிடம் பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த வருடம் ஏப்ரல் 20ம் தேதி பிச்சையின் செங்கல்சூளையில் கல் அறுத்து கொண்டிருந்தோம். அப்போது ரமேஷ் அங்கு வந்து கல் அறுக்க வேண்டாம் எங்களுக்குள் பிரச்சனை இருந்துகொண்டிருக்கிறது. அதனால் கல் அறுக்க வேண்டாம் என்று மிரட்டினார். நாங்கள் இந்த வருடம் இவருக்கு கல்அறுக்கிறோம் அடுத்தவருடம் உங்களுக்கு கல் அறுப்போம் கூலி வேலை செய்யும் எங்களை ஏன் மிரட்டுகிறீர்கள் எங்களை ஒன்றும் செய்யவேண்டாம் என்று கூறினோம். என் மனைவி புஷ்பவள்ளியும் எங்களை ஒன்றும் மிரட்ட வேண்டாம் என்று சொன்னதற்கு என் மனைவியை ரமேஷ் அடித்து கீழே தள்ளிவிட்டார். என் மனைவி மயக்கமடைந்துவிட்டதால் நான் அவரை தூக்கிகொண்டுபோய் அங்கயேயே இருந்த கொட்டகையில் போட்டேன். நான் அவருக்கு தண்ணீர் கொடுத்து கொண்டிருந்தேன். அதன்பிறகு பிரச்சனை நடந்தது எனக்கு தெரியாது. நான் என் ஓனருக்கு போன் செய்து சொன்னேன். அதன்பிறகு கரபுர என்று சத்தம் கேட்டது. நானும் என் மனைவியும் அந்த சத்தம் கேட்டு போய் பார்த்தோம். செங்கல் சூளை ஓனர் பிச்சை வெட்டுப்பட்டு கிடந்தார். அதன்பிறகு அவரது மகன் வண்டியில் வைத்து

கட்டு கட்டி வருவதற்காக போய்விட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி பகுதியாக பிறழ்சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

ரமேஷ் என்னை கெட்டவார்த்தையால் திட்டி மிரட்டியதாக போலிசாரிடம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ரமேஷ் பிச்சையை பார்த்து உன்னைத்தான்டா ரொம்பநாளா நானும் எனது அம்மாவும் எதிர்பார்த்துகிட்டு இருந்ததோம். என்றும் எம் அம்மா உன்னை போட்டு தள்ளிட்டுதான் வீட்டுக்கு வரணும்னு சொல்லியிருக்கு சொல்லிக்கொண்டே குச்சிகாரரி மகனே சாவுடா தேவிடியா மகனே என்று அவர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது முதலாளி பிச்சையின் வலது கை முட்டிக்கு மேலும் வலது கன்னத்திலும் மாறிமாறி வெட்டினார் என்றும் வெட்டுபட்ட முதலாளி பிச்சை கீழே சாய இதை பார்த்த நானும் எனது மனைவி புஷ்பவள்ளியும் சந்திரசேகரனும் ஏன்டா பாவி பயலே வயசானவரை இப்படி செஞ்ச என்று அழுதுகொண்டே அவரை துாக்கி பார்க்கும்போது ரத்தம் ஆறாக ஓடியது என்றும் இதை பார்த்த ரமேஷ் ஒழுங்க இருங்க உங்களுக்கும் இதே கதிதான் என்று சொல்லிக்கொண்டே மண்ணியாற்றில் இறங்கி ஓடிவிட்டார் என போலிசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்துகொண்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மனுவின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது,

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 301/2022 |
| Prosecution Witness | : | PW 3 |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : புஷ்பவள்ளி | Caste | : | |
| Father's Name | : அர்ச்சுணன் | Calling | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | 41 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 17.03.2023.**

***<u>எதிரி 1, 2 வருகை</u>***

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u> :–**

எனக்கு சொந்த ஊர் ஒரத்தநாடு தெக்கூர். நான் போனவருடம் பிச்சையின் செங்கல் சூளையில் வேலை பார்த்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 20.04.2022 அன்று நாங்கள் கல் அறுத்து கொண்டிருந்தபோது எதிரி ரமேஷ்கல் அறுக்க கூடாது ஊருக்கு போங்க என்று சொன்னார். நான் என்னா அண்ணே எங்களை கேட்குறீங்க ஓனரை கேளுங்க என்று சொன்னேன். ஏறிப்போங்க கல்லறுக்கவேண்டாம் என்று சொல்லி என்னை கல்லாலேயே தள்ளிவிட்டுவிட்டார். எனக்கு நெஞ்சு அடைத்துவிட்டது. என்னை தூக்கி கொண்டுபோய் கொட்டகையில் வைத்து என் கணவர் தண்ணீர் கொடுத்து கொண்டிருந்தார் ரமேசின் அம்மா வந்து அவர்களிடம் ஏன் சண்டை போடுகிறாய் என்று சொல்லி ரமேசை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டது. என் மகள் எங்கள் ஓனருக்கு போன் செய்து சொன்னார். ஓனர் வரேன் அம்மா என்று சொல்லிவிட்டு வந்தார். கொஞ்சநேரம் கழித்து ஒரே சத்தம் கேட்டது. நாங்கள் போய் பார்த்த போது பிச்சை வெட்டப்பட்டு கிடந்தார். பிச்சையை அவரது மகனும் மகனின் மனைவியும் தூக்கி கட்டுபோட்டு வைத்திருந்தார்கள். பிளசர் வந்து அவரை ஏற்றிகொண்டு சென்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். ரமேஷ் எங்களுடன் சண்டை போட்டபோது அவர் கையில் அரிவாள் இருந்தது. என்னிடம் காட்டப்படும் அசாபொ1 தான் அந்த அரிவாள்.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி பகுதியாக பிறழ்சாட்சியாக**

**அனுமதிக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

ரமேஷ் என்னை கெட்டவார்த்தையால் திட்டி மிரட்டியதாக போலிசாரிடம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ரமேஷ் பிச்சையை பார்த்து உன்னைத்தான்டா ரொம்பநாளா நானும் எனது அம்மாவும் எதிர்பார்த்துகிட்டு இருந்தோம் என்றும் என் அம்மா உன்னை போட்டு தள்ளிட்டுதான் வீட்டுக்கு வரணும்னு சொல்லியிருக்கு சொல்லிக்கொண்டே குச்சிகாரரி மகனே சாவுடா தேவிடியா மகனே என்று அவர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது முதலாளி பிச்சையின் வலது கை முட்டிக்கு மேலும் வலது கன்னத்திலும் மாறிமாறி வெட்டினார் என்றும் வெட்டுபட்ட முதலாளி பிச்சை கீழே சாய இதை பார்த்த நானும் எனது கணவரும் சந்திரசேகரனும் ஏன்டா பாவி பயலே வயசானவரை இப்படி செஞ்ச என்று அழுதுகொண்டே அவரை தூக்கி பார்க்கும்போது ரத்தம் ஆறாக ஓடியது என்றும் இதை பார்த்த ரமேஷ் ஒழுங்க இருங்க உங்களுக்கும் இதே கதிதான் என்றும் சொல்லிக்கொண்டே மண்ணியாற்றில் இறங்கி ஓடிவிட்டார் என்றும் போலிசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்துகொண்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மனுவின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது,

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

## **DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 301/2022 |
| Prosecution Witness | : | PW 4 |

| | | | |
|---|---|---|---|
| Name | : **பிரபு** | Caste | : |
| Father's Name | : **மோகன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 41 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 17.03.2023.**

***எதிரி 1, 2 வருகை***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் பாபநாசம் தாலுக்கா மணலூரில் குடியிருக்கிறேன். நான் டிரைவராக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் 20.04.2022 அன்று மாலை 5.30 மணியளவில் பட்டுக்குடி மெயின்ரோடு வழியாக சென்றுகொண்டிருந்தபோது ராஜலெட்சுமி அம்மா பிச்சையை கொன்றுவிட்டு வரச்சொல்லி அவரது மகன் ரமேசிடம் சத்தம் போட்டு கொண்டு இருந்தார். நான் சவாரியை விட்டுவிட்டு திரும்பி 6.30 மணிக்கு வரும்போது பிச்சை வெட்டுப்பட்டு கிடந்தார். இரத்தம் வந்து கொண்டிருந்தது. உடனே ஒரு கார்எடுத்து அவரை Ghக்கு அனுப்பி வைத்தோம். காரை எடுத்து வரச்சொல்லி என்னுடைய நண்பர் விக்னேசுக்கு நான்தான் சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

மனுவின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.